# பத்திரிக்கை செய்தி

தமிழ்நாடு அரசு சமூகப்பாதுகாப்புத்துறையின் கீழ் இயங்கும் ஒருங்கிணைந்த குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவரை தலைவராக கொண்டு இயங்கி வரும், அரியலூர் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு அலுவலகத்திற்கு பாதுகாப்பு அலுவலர் நிறுவனம் சார்ந்தது (Protection Officer – Institutional Care) தற்காலிக பணியிடத்தினை ஒப்பந்த அடிப்படையில் ஒரு பதவிக்கு மாதம் ரூ.21,000/- தொகுப்பூதியம் 1 வருட கால ஒப்பந்தத்திற்கு 40 வயதிற்குட்பட்ட அரியலூர் மாவட்டத்தை சேர்ந்த பட்டதாரி / முதுகலை பட்டதாரிகள் (10 + 12+ 3 Pattern) படிப்பு முடித்தவர்களாக இருத்தல் வேண்டும். மேலும் உளவியல் / சமூகப்பணி / சமூகவியல் / வழிகாட்டுதல் மற்றும் ஆற்றுப்படுத்துதல் பட்டம் பெற்றிருப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். குழந்தைகள் சார்ந்த பணியில் 2 ஆண்டுகள் முன் அனுபவம் பெற்றிருக்க கூடிய தகுதி வாய்ந்த நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

விண்ணப்பம் https://ariyalur.nic.in என்ற மாவட்ட இணையதள முகவரியிலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். பூர்த்தி செய்த விண்ணப்பத்தினை 06.07.02020 அன்று மாலை 05.00மணிக்குள் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு, இரண்டாவது தளம், அரசு பல்துறை வளாகம், ஜெயங்கொண்டம் சாலை, அரியலூர் - 621 704. என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் தலைவர்
மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலகு
அரியலூர்.

2/2